Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

TUESDAY, JUNE 25, 2024

புதன்கிழமை ஜூன் 26, 2024 | ஒளி: 09 கதிர்: 281 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## பாராளுமன்றம்
# அவசரமாக கூடுகிறது



பாராளுமன்றத்தை அவசரமாகக் கூட்டுமாறு சபாநாயர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தல் விடுத்துள்ளார். அதனடிப்படையில், எதிர்வரும் 2ஆம் திகதியன்று பாராளுமன்றம் காலை 9.30க்கு அவசரமாகக் கூடவுள்ளது. ஜூன் 20ஆம் திகதி கூடி, கலைந்த பாராளுமன்றம் ஜூலை 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 16ஆம் பிரிவின் பிரகாரம் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் கோரிக்கைக்கு அமையப் பாராளுமன்றம் அவசரமாகக் கூட்டப்படுகிறது.

ஜனாதிபதியிடம் அறிக்கையொன்றை வழங்குவதற்காகப் பாராளுமன்றம் அழைக்கப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

அன்றைய தினம் நாட்டின் பொருளாதார நிலை, பொருளாதாரம்

தொடர்ச்சி P2



# இரவு 8 மணிக்கு முக்கிய உரை

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, புதன்கிழமை(26) இரவு 8 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் ஜனாதிபதி மக்களுக்குத் தெரியப்படுத்துவார் என கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் அறிவிப்பின் மூலம் இலங்கை மக்களுக்குப் பல நிவாரணங்கள் கிடைக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.


# விண்வெளியில் இருந்து, பிடிக்கப்பட்ட "ராமர் பாலம்"



விண்வெளியில் இருந்து செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட, இந்தியா-இலங்கை இடையிலான ராமர் பாலத்தின் படத்தை ஐரோப்பிய ஏஜென்சி வெளியிட்டது.

இந்தியா-இலங்கை இடையிலுள்ள, கடலுக்கடியில் 48 கிலோ மீட்டர் தொலைவுக்கு, இந்தியாவின் தென்கிழக்குத் தீவுப் பகுதியான ராமேஸ்வரம் தீவிலிருந்து, இலங்கையின் மன்னார் தீவுப்பகுதிக்கு இடையில் ராமர் பாலம் அமைந்துள்ளது.

தொடர்ச்சி P2



## இணையத்தளத்தில் மோசடி:
# முப்பது வெளிநாட்டவர் கைது

இணையம் ஊடாக சட்டவிரோதமான முறையில் நிதி கொடுக்கல் வாங்கல்களை நடத்தும் இரண்டு நிலையங்களைச் சுற்றிவளைத்து சுமார் 30 வெளிநாட்டவர்களைக் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பில் திங்கட்கிழமை (24) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட இந்த வெளிநாட்டவர்களில் சீனா, பிலிப்பைன்ஸ், மாலத்தீவுகள், பாகிஸ்தான், இந்தியா மற்றும் நேபாளம் உள்ளிட்ட பல நாடுகளின் பிரஜைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

தொடர்ச்சி P2

## அமைச்சரவையில்
# மாற்றம்?

தற்போதைய அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டு மக்களுக்கு புதன்கிழமை (26) விசேட உரையாற்றவுள்ளார். அந்த உரைக்குப் பின்னர், அரசியல் மாற்றங்கள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை மாற்றத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களான, ராஜித சேனாரத்ன, சம்பிக்க ரணவக்க மற்றும் சரத் பொன்சேகா ஆகியோருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படலாம் என்றும் அறியமுடிகின்றது. அத்துடன், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை மையமாகக் கொண்டு, அந்த மூவருடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் கூட்டணி அமைக்கப் போவதாகத் தெரியவந்துள்ளது.

இந்த அரசியல்வாதிகள் ஜனாதிபதியுடன் இணைவது தொடர்பான உத்தியோகபூர்வ வைபவம் இந்த வாரத்தின் பிற்பகுதியில் நடைபெறவுள்ளதாக அறியமுடிகின்றது.

# இந்திய மீனவர் தாக்கியதில் கடற்படை சிப்பாய் பலி

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில், இந்திய மீனவர்களின் தாக்குதலுக்கு இலக்கான கடற்படை சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் கடமையாற்றும் ரத்நாயக்க எனும் கடற்படை வீரரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமை சேர்ந்த கடற்படையினர் செவ்வாய்க்கிழமை(25) அதிகாலை கடலில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அதன் போது நெடுந்தீவு கடற்பரப்பை அண்டிய பகுதியில் படகொன்றில் அத்துமீறி நுழைந்து இந்திய மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளதை, அவதானித்து,

தொடர்ச்சி P2

# ஆசிரியர்களுக்கு இன்று சுகயீனம்

நிதர்ஷன் வினோத்


அதிபர்கள், ஆசிரியர்களால் இன்றைய தினம் (26) முன்னெடுக்கவிருக்கும் சுகயீன விடுமுறைப் போராட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் சி. சசிதரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், சம்பள உயர்ச்சிக்காக ஒருநாள் விடுமுறையை அறிவிப்போம். அதிபர்கள் ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக 1998 ஆம் ஆண்டுமுதல் மாறி மாறி வருகின்ற ஆட்சியாளர்களிடம் சம்பள முரண்பாடுகளைத்

தொடர்ச்சி P2

# ஜூலியன் அசாஞ்சே சிறையில் இருந்து விடுதலை



ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் அமெரிக்கா நடத்திய போர் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், ஊழல் தொடர்பான ரகசிய ஆவணங்களை ஹேக் செய்து விக்கிலீக்ஸ் இணையதளத்தில் வெளியிட்டவர் விக்கி லீக்ஸ் நிறுவன தலைவர் ஜூலியன் அசாஞ்சே ஆவார்.

தொடர்ச்சி P2

# என்னிடம் ரணில் என்ன சொன்னார்



வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

அதில், இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனும் (பிள்ளையான்) பங்கேற்றிருந்தார். அப்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தன்னிடம் தெரிவித்த

தொடர்ச்சி P2

# மீண்டுமொரு பொய் கூறி பட்டாசு கொளுத்த முயற்சி



220 இலட்சம் மக்கள் மகிழக்கூடிய கதையைச் சொல்லப் போகிறோம் என தெரிவித்து வருகின்றனர் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மீண்டுமொரு பொய்யைக்கூறி, பட்டாசு கொளுத்தியும், மேளம் அடித்தும் மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றனர் என்றார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் பேரழிவு மற்றும் இலங்கையின் நிதி வங்குரோத்து ஆகிய மூன்று துயரங்கள் நடந்தபோதிலும், சமீபத்திய காலங்களில் நல்ல செய்தி எதுவும் ஏற்படவில்லை.

தொடர்ச்சி P2

# தாயைக் கொன்ற தனி குளவி



செ.தி.பெருமாள்

குளவி கொட்டுக்கு இலக்கான, மஸ்கெலியாவைச் சேர்ந்த பெண்ணொருவர், பேராதனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வந்த நிலையில், ஆறு நாட்களுக்குப் பின்னர் மரணமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2



# 50 நாட்களில் பொத்துவில்லை அடைந்த பாதயாத்திரீகர்கள்

வி.ரி.சகாதேவராஜா

யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச்சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 50 ஆவது நாளில் பொத்துவில்லை அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஜெயாவேல்சாமி தலைமையிலான கதிர்காம பாதயாத்திரை குழுவினர் கடந்த மே மாதம் 11ஆம் திகதி புறப்பட்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கடந்து கடந்த (15)ம் திகதி சனிக்கிழமை ஆறாவது மாவட்டமான அம்பாறை மாவட்டத்திற்குள் பிரவேசித்தார்கள்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# ஜூலியன் அசாஞ்சே சிறையில் இருந்து விடுதலை

இந்த சம்பவம் உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து, ஜூலியன் அசாஞ்சேவை தேடப்படும் குற்றவாளியாக அமெரிக்கா அறிவித்தது.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா கொடுத்த நெருக்கடிகளின் காரணமாக இங்கிலாந்தில் உள்ள ஈகுவடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்த அசாஞ்சே, கடந்த 2019-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் லண்டனில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார். உளவு குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள ஜூலியன் அசாஞ்சேவை அமெரிக்காவுக்குக் கொண்டு வரும் சட்ட நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு தொடங்கியது.

இதையடுத்து, ஜூலியன் அசாஞ்சேவை அமெரிக்காவிற்கு நாடு கடத்தும்படி இங்கிலாந்து அரசு 2022-ம் ஆண்டு ஜூன் மாதம் உத்தரவிட்டது. அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படுவதை எதிர்த்து அசாஞ்சே இங்கிலாந்து நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். இந்த வழக்கு விசாரணை இங்கிலாந்து நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இங்கிலாந்து சிறையிலிருந்து ஜூலியன் அசாஞ்சே, ஜூன் 25ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டுள்ளார். அமெரிக்க இராணுவ ரகசிய ஆவணங்களை விக்கி லீக்சில் வெளியிட்ட குற்றத்தை ஒப்புக்கொள்வதாக ஜூலியன் அசாஞ்சே தெரிவித்தார். இந்த வழக்கு தொடர்பாக அமெரிக்காவில் ஆஜராகவும் ஒப்புக்கொண்டார். அமெரிக்காவின் மெரினா தீவில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜராக உள்ளார்.

இங்கிலாந்து சிறையிலிருந்த அசாஞ்சே, அமெரிக்காவின் நீதித்துறையின் ஒப்பந்தம் செய்துகொண்டார். ஒப்பந்தப்படி, அமெரிக்க இராணுவ ரகசியங்களை வெளியிட்ட குற்றத்தை அசாஞ்சே ஒப்புக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும். இந்த குற்றத்திற்கு 62 மாதங்கள் (1,860 நாட்கள்) சிறைத் தண்டனை விதிக்கப்படும். ஆனால், அசாஞ்சே ஏற்கெனவே 1,901 நாட்கள் இங்கிலாந்து சிறையிலிருந்துள்ளார்.

இதனால், இராணுவ ரகசியங்களை வெளியிட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் அதற்கான தண்டனையை ஏற்கெனவே இங்கிலாந்து சிறையில் அனுபவித்ததால் விடுதலை செய்ய வேண்டும் என அமெரிக்க நீதித்துறையிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தத்திற்கு அமெரிக்க நீதித்துறை சம்மதம் தெரிவித்ததையடுத்து, இங்கிலாந்து சிறையிலிருந்து அசாஞ்சே விடுதலை செய்யப்பட்டார்.

இதையடுத்து, இங்கிலாந்திலிருந்து அசாஞ்சே விமானம் மூலம் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அவர் அமெரிக்காவின் மெரினா தீவில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜராக உள்ளார். அமெரிக்க இராணுவம் குறித்த இரகசிய ஆவணங்களை வெளியிட்ட குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

பின்னர், ஏற்கெனவே இங்கிலாந்தில் சிறைத் தண்டனை அனுபவித்ததையடுத்து ஒப்பந்தப்படி அவரை அமெரிக்க நீதிமன்ற வழக்கில் இருந்து விடுதலை செய்ய உள்ளது. இதனைத் தொடர்ந்து ஜூலியன் அசாஞ்சே தனது சொந்த நாடான ஆஸ்திரேலியா செல்ல உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# 50 நாட்களில் பொத்துவில்லை அடைந்த பாதயாத்திரீகர்கள்

50 நாட்களாகக் கடந்து பொத்துவில்லை அடைந்த குழுவினர், பானமையை அடைந்து சன்னியாசி மலையில் தங்குவர்.

27ஆம் திகதி வியாழக்கிழமை உகந்தை மலையை அடைய இருக்கின்றார்கள். 30ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் முதல் நாள் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றார்கள்.

# என்னிடம் ரணில் என்ன சொன்னார்

தெரிவித்த ஒருசிலவற்றை, இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன், ஊடகங்களுக்கு செவ்வாய்க்கிழமை (25) தெரிவித்தார்.

கடந்த காலங்களைப்போல் நாங்கள் பிழையான விடங்களையும், பிரச்சினையான விடையங்களையும், நாம் கொண்டுவரமாட்டோம். எனவே, இணைந்து செயலாற்றுவோம் என ஜனாதிபதி சொல்லியிருக்கின்றார் என்றார். மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயத்தின் வாயிற் கதவு அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு வித்தியாலயத்தின் அதிபர் ஆ.புட்கரன் தலைமையில் நடைபெற்ற திங்கட்கிழமை(24) நடைபெற்றது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சின்னவத்தை முத்தமிழ் வித்தியாலயம்மற்றும் மண்டூர் நவகிரி நகர் வித்தியாலயத்திற்கும் தலா ஒவ்வொரு நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம் அன்றையத்தினம் போரதீவுப் பற்று பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

பொதுஜனக் பெரமுனக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்போவதாக செய்திகள் வெளிவருகின்றன. உங்களுடைய கட்சி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதாகக் கூறியிருக்கின்றீர்களே! என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.






# விண்வெளியில் இருந்து, பிடிக்கப்பட்ட “ராமர் பாலம்”

இந்தநிலையில், ராமர் பாலத்தை ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தின் கோப்பர்நிக்கஸ் சென்டினெல்- 2 செயற்கைக்கோள் புகைப்படம் எடுத்து ஆய்வு மையத்துக்கு அனுப்பியிருக்கிறது.

இந்தப் புகைப்படத்தில் ராமர் பாலத்தில் இருக்கும் மண் அமைப்புகள் உலர்ந்து காணப்படுகிறதுடன் இங்கு கடலின் ஆழமே ஒன்று முதல் 10 மீட்டர் வரைதான் என ஐரோப்பிய ஏஜென்சி தெரிவித்துள்ளது.

பாலம் எப்படி உருவானது என்பது பற்றிப் பல கோட்பாடுகள் இருந்தாலும், புவியியல் சான்றுகளின்படி, இந்த சுண்ணாம்புக் கற்கள் ஒரு காலத்தில் இந்தியாவை இலங்கையுடன் இணைத்த நிலத்தின் எச்சங்கள் என்று புவியியல் சான்றுகள் கூறுகின்றன.

## பாராளுமன்றம் அவசரமாக கூடுகிறது

சீர்குலைந்தமைக்கான நிலை போன்றவை குறித்து அவர் அறிக்கை வெளியிட்டுள்ளார். பாராளுமன்றம் எதிர்வரும் 2ஆம் திகதி அவசரமாகக் கூடவுள்ளதாக அனைத்து பாராளுமன்றம் உறுப்பினர்களுக்கும் அறிவிக்கும் பணிகளில் பாராளுமன்றம் ஈடுபட்டுள்ளது.

மேலும், 2ஆம் திகதிக்குப் பிறகு பாராளுமன்ற கூட்டத்தொடரை முடிவு செய்ய, பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுக் கூட்டம், 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இணையத்தளத்தில் மோசடி: முப்பது வெளிநாட்டவர் கைது

முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் ஊடாகவே இவர்கள் இந்த மோசடியைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் 5,000 ரூபாய் முதலீடு செய்தால் 3,000 ரூபாய் இலாபம் கிடைக்கும் என்று கூறி பெருந்தொகை வசூலித்து மோசடியில் ஈடுபட்டு வருவது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சோதனையின் போது, தொடர்புடைய இரு வீடுகளிலிருந்தும் பெருமளவிலான தொடர்பாடல் உபகரணங்களையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கையில் இருந்து மோசடியில் ஈடுபட்டுவந்த இந்த கும்பல் மற்ற நாடுகளுக்கும் இந்த மோசடியைப் பரப்பியுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்த வெளிநாட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பலகோடி பணத்தை மோசடி செய்துள்ளதாக விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.



## தாயைக் கொன்ற தனி குளவி

இரண்டு பிள்ளைகளின் தாயான, சிவகுமார் அந்தோனி டெரிண்டா (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர், 2 பிள்ளைகளின் தாய் ஆவார்.

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனியின் மஸ்கெலியா கிலன்டில் பிரிவில், 19ஆம் திகதி பணிபுரிந்து கொண்டு இருந்த போது, தனி ஒரு குளவி அப்பெண்ணைக் கொட்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண், மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். எனினும், மேலதிக சிகிச்சைகளுக்காக பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதன் பின்னரே மரணமடைந்துள்ளார்.

# மீண்டுமொரு பொய் கூறி பட்டாசு கொளுத்த முயற்சி

இதற்கு மத்தியில் சிலர் பட்டாசு கொளுத்த தயாராகி வருகின்றனர். வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதே இதற்குக் காரணம் என குறிப்பிடுகின்றனர்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 259ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், கொழும்பு, ஹோமாகம, பாதுக்க, மாதுலுவாவ சோபித மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூன் 25ஆம் திகதி இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மைக்காலமாக நாட்டின் பெரும்பான்மையான மக்களைப் பொய்களால் ஏமாற்றி வரும் நிலையில், இந்நாடு பெரும் துயருக்கு ஆளாகியது. இதன் காரணமாகவே, ஒரு நாடாக நாம் இந்தப் பெரும் பேரிடரில் விழுந்திருக்கிறோம். இந்த பட்டாசு கொளுத்த முயலும் சந்தர்ப்பம் உண்மையில் வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கா, அல்லது வேறு காரணத்தினாலா என்பது குறித்த உண்மை நாட்டுக்குத் தெரிய வேண்டும் என்றார்.

உள்நாட்டு வெளிநாட்டுக் கடன் சுமையிலும், வங்குரோத்து நிலையிலும் ஒரு நாடாக நாம் தவித்து வருகிறோம். பெற்ற வருமானத்திலிருந்து கடனை அடைக்க முடியாமல், கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையே வங்குரோத்து நிலை என்று அழைக்கிறோம். சமூகத்தில் சிறு பிள்ளை முதல் பெரியோர் வரை ஏற்றுக் கொள்ளும் உண்மையாகும். இந்நேரத்தில் 220 இலட்சம் மக்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இருதரப்பு, பலதரப்பு மற்றும் தனியாள் கடன் போன்ற வெளிநாட்டுக் கடன்களும் உள்நாட்டுக் கடன்களையும் கொண்ட நமது நாட்டில், 2023 தரவுகளின் பிரகாரம் 92 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் செலுத்தப்படாத வட்டியால் பின்னர் சேர்ந்த வட்டியோடு 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை நாம் செலுத்த வேண்டியுள்ளோம். இவ்வாறான கடன் நிலைமை ஏற்பட்டுள்ள வேளையில், இருதரப்பு கடன்தாரர்களுடன் சில இணக்கப்பாடுகள் எட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது நாட்டின் கடன்களில் ஒரு பகுதி மட்டுமே. இன்னும் அதிகமான வெளிநாட்டு வர்த்தக கடன்களைச் செலுத்த வேண்டியுள்ளன. இது தொடர்பாக எந்த உடன்பாடும் இதுவரை எட்டப்படவில்லை என்றார்.

# இந்திய மீனவர் தாக்கியதில் கடற்படை சிப்பாய் பலி

அவர்களைக் கைது செய்ய முயன்றுள்ளனர்.

அதன் போது கடற்படை படகிலிருந்து, மீனவர்களின் படகுக்குச் சென்ற கடற்படை வீரர் மீது மீனவர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். அதில் அவர் உயிரிழந்துள்ளார்

இதனையடுத்து, மேலதிக கடற்படையினர் மீனவர்களின் படகுக்குச் சென்று, படகில் இருந்த 10 மீனவர்களையும் கைது செய்து கடற்படை படகில் ஏற்றினர்.

கைது செய்யப்பட்ட 10 மீனவர்களும், அவர்களின் படகும், காங்கேசன்துறை கடற்படை முகாமிற்குக் கொண்டு வரப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் உயிரிழந்த கடற்படை வீரரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கடற்படையினரும் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# ஆசிரியர்களுக்கு இன்று சுகயீனம்

தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கையளித்தோம். ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தீர்ப்பதாக வாக்குறுதியளித்து பின்னர் ஏமாற்றப்பட்டோம்.

இது காலம் காலமாகத் தொடர்கின்றது. இன்றைய கால கட்டத்தில் வாழ்வதற்குப் போதுமான வருமானமின்றி நாம் ஒவ்வொருவரும் கடனாளிகளாக மாறியுள்ளோம்.

இந்நிலையில், தருவதாக உறுதியளித்த வேதனத்தையாவது தருமாறு இந்த அரசிடம் கேட்கிறோம்.

நீண்டகாலமாக மாணவர்களின் நலன்களிலும், அவர்களின் கல்வியிலும் எத்தகைய பாதிப்புகளும் ஏற்படாதவகையில் எமது அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்துவரும் சேவைக்கு மதிப்பளித்து, சம்பள அதிகரிப்பை வழங்குமாறு புதன்கிழமை (26) நடைபெறும் ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பில் அனைவரும் கலந்துகொள்வோம். இது ஒவ்வொரு அதிபர், ஆசிரியரினதும் தனிப்பட்ட நியாயமான கோரிக்கை. இதனை நாம் அனைவரும் ஒருமித்து, ஒன்றுபட்டு அரசிற்கு எடுத்துரைப்போம் என்றுள்ளது.



# வீதி விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் - முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருங்கன் ரயில் கடவை பகுதியில் திங்கட்கிழமை (24) மாலை பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நானாட்டான் பிரதேசத்திலுள்ள சாளம்பன் நாகசெட்டி கிராமத்தைச் சேர்ந்த 35 வயதுடைய சுந்தரலிங்கம் தீபன் என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மன்னாரில் இருந்து சென்ற தனியார் பேருந்தும், வவுனியாவில் இருந்து முருங்கன் வீதி நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் முருங்கன்- கற்கிடந்தகுளம் கிராமத்திற்கும் இடையில் உள்ள ரயில்வே கடவைப் பகுதியில் வைத்து மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

சடலம் முருங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணையை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நியமனம்



மாத்தளை-இரத்தோட்டை இல 27-6 கம்மடுவ வீதியை வசப்பிடமாகக் கொண்ட ஜயகுமார் ஷான், மாத்தளை மாவட்ட நிதிமன்ற நீதவான், நாமல் பெரேராவின் முன்னிலையில், அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துக் கொண்டார்.

ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியில் ஆசிரியற் பயிற்சிப் பெற்று, மொனராகலை சரஸ்வதி, விபுலாநந்தா, ஸ்ரீ சண்முகா ஆகிய தமிழ் மகா வித்தியாலயங்களில், ஆசிரியராக கடமையாற்றிய இவர், மாத்தளை கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றுகின்றார்.

# மகளுக்கு கழிவறை திரவத்தை கொடுத்த தந்தை



ஹம்பாந்தோட்டை- ஹங்கம பிரதேசத்தில் தனது ஆறு வயது மகளுக்கு கழிவறையை துப்புரவு செய்யும் திரவத்தை (டாய்லெட் கிளீனர் திரவத்தை) வாயில் பலவந்தமாக ஊற்ற முயன்ற தந்தை கைது செய்யப்பட்டள்ளார்.

ஹங்கம, படாட பிரதேசத்தில் வசிக்கும் தொழிலாளியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் பணிபுரியும் மனைவி, பணம் அனுப்பாததால் கோபமடைந்து, மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களை பயமுறுத்துவதற்காக இவ்வாறு செய்துள்ளதாக ஹங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு (119) கிடைத்த தொலைபேசி அழைப்பின் பிரகாரம், சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகவும், சந்தேகநபர் அவ்வேளையில் அதிகளவில் குடிபோதையில் இருந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கழிவறையை துப்புரவு செய்யும் திரவம் பருகப்பட்டதா? என்பதை பரிசோதிப்பதற்காக ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் ஆறு வயது சிறுமி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# நினைவேந்தல் நிகழ்வு



மலையக கலை கலாசார சங்கம் (இரத்தின தீபம்) அமைப்பின் ஏற்பாட்டில் மூத்த ஊடகவியலாளர் கலைஞர் மேடைநாடக தயாரிப்பாளர் அமரர்க .ப.சிவம் மற்றும் சிங்களம், தமிழ், கன்னடம், மலையாளம், திரைப்பட நடிகை ஆச்சி மனோரமா ஆகிய இருவருக்கும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் ஆன்றோர் கௌரவிப்பு நிகழ்வும் விருதுகள் வழங்கலும் மலையக கலை கலாசார சங்கம் (இரத்தின தீபம்) அமைப்பின் தலைவர் எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் கண்டி டி.எஸ்.சேனாநாயக வீதி செல்லத்துரை நினைவு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்றுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வீரகேசரி பத்திரிகையின் உதவி செய்தி ஆசிரியரும் மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான ஜே.ஜி.ஸ்டீபன் கலந்துகொண்டுள்ளார்.

கௌரவ அதிதிகள் ஊடகவியலாளரும் உத்தியோகப்பற்ற பதில் நீதிவானுமாகிய மொஹமட் வைஸ் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும், “இரத்தின தீபம்” ஸ்தாபகர் இராஜா ஜென்கின்ஸ் பிரதம அமைப்பாளர் மரியசாமி சத்தியவேல் ஆகியோர் நிகழ்வை சிறப்பித்த சகலருக்கும் நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

## “ஐக்கிய தேசியக் கட்சியுடன்

# பலரும் இணைவர்”

## கே.கே.பியதாச ஆரூடம்

சுதத் எச்.எம்.ஹேவா



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், நுவரெலியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பலர் ரணில் விக்ரமசிங்கவுடன் இணையவுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம அமைப்பாளர் கே.கே.பியதாச தெரிவித்துள்ளார்.

ஹட்டனில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே பியதாச மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த நாடு அழிந்து கொண்டிருந்த போது, இந்த நாட்டைக் காப்பாற்ற எவரும் முன்வராத போது, கடும் சவால்களுக்கு மத்தியில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் இந்த நாட்டை பொறுப்பேற்றார்.

இந்த நாட்டைப் பொறுப்பேற்ற ரணில் விக்ரமசிங்க, பல்வேறு வரிசைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.


ஹோட்டல்களின் வீடுகளில் சமையலுக்கு கேஸ் இல்லை. இவர்கள் கேஸ் சிலிண்டர்களை பிடித்துக்கொண்டு பல மணிநேரம் காத்திருந்தனர் 15,20 மணி நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று.

ஆனால், இன்றைய நிலை அதிலிருந்து மிகவும் மாறுபட்டது, இன்று எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை, பால் மா வரிசை, எதுவும் இல்லை.

சிலர் இந்த நாட்டை கையகப்படுத்தி இவ்வாறு செய்து அபிவிருத்தி செய்வோம் என்று இன்று கூறுகின்றார்கள். அன்றைய காலத்தில் இருந்த சவால்களை எதிர்கொண்டு இந்த மக்கள் நாட்டை கையகப்படுத்தி தமது அபிவிருத்தி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது.

ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டைக் கைப்பற்றவில்லையென்றால், இன்று இந்த நாடு இருக்காது. நுவரெலியா மாவட்ட தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள், இந்த யதார்த்தத்தை நன்கு புரிந்து கொண்டு எதிர்காலத்தில் ரணில் விக்ரமசிங்கவுடன் இணையும். அத்துடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றி உறுதியானது எனவும் கூறியுள்ளார்.

# பெண் பிசாசை தாக்கிய மூன்று பேய்கள் கைது



பொசன் பண்டிகையை முன்னிட்டு, சிறு பிள்ளைகள் ஒன்று சேர்ந்து வைத்திருந்த பேய் வீட்டினுள் குடிபோதையில் நுழைந்த மூவர், பிசாசாகக் காட்சியளித்த சிறுமியைத் தாக்கியுள்ள சம்பவம் களுத்துறை பல்பொல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

களுத்துறை வடக்கு, பல்பொல படகு வீதியைச் சேர்ந்த ஏ.டி.சிதும் லக்மினா என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக களுத்துறை போதனா வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்த சிறுவர்கள் ஒன்று சேர்ந்து கடுமையாக உழைத்து பேய் வீடு ஒன்றை தயார் செய்து சில நாட்கள் நடத்தியுள்ளனர்.

மூன்றாவது இரவு நிகழ்ச்சியின் போது, மூன்று குடிகாரர்கள் பேய்கள் குகைக்குள் நுழைந்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுமியை தாக்கியவர் பிசாசு என தாக்கியதாகவும், பாதிக்கப்பட்ட மூவரும் பிசாசின் கழுத்தை பிடித்து தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் களுத்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காதலனுடன் பேய் வீட்டுக்கு சென்ற மனைவியால் களேபரம்



பொசன் போயா தினத்தன்று நாட்டின் பல பிரதேசங்களில் பேய் வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு, நவகமுவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பேய் வீட்டுக்கு பெண்ணொருவர், மற்றுமொரு நபருடன் சென்றிருந்துள்ளார்.

எனினும், அங்கிருந்த சவப்பெட்டியில் படுத்திருந்தவர், தன்னுடைய கணவர் என்று அப்பெண்ணுக்கு தெரியாது.

ஆனால், மற்றுமொரு நபருடன் வந்திருக்கும் பெண், தன்னுடைய மனைவி என்பதை அறிந்துகொண்ட சவப்பெட்டியில் படுத்திருந்த நபர், மனைவியுடன் வந்திருந்த நபரையும் அப்பெண்ணையும் (மனைவியையும்) தாக்கியுள்ளார். பேய்தான் நண்பனையும் அவரது காதலியையும் தாக்குவதாக ஊகித்த சக நண்பர்கள், அந்த பேயை அடித்துள்ளனர்.இதனால், நவகமுவ பேய் வீடு அல்லோலகல்லோலப்பட்டது.

அதன்பின்னர், மோதல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 12 பேரை பிணையில் விடுதலை செய்யுமாறு கடுவலை நீதவான் சனிமா விஜயபண்டார, திங்கட்கிழமை (25) உத்தரவிட்டுள்ளார்

பொசன் போயாவை முன்னிட்டு நவகமுவ ரணல பிரதேசத்தில் இளைஞர்கள் குழுவொன்று பேய் வீடு கட்டியதாகவும், 21 வயதுடைய பெண் ஒருவர் தனது காதலனுடன் மேலும் சில இளைஞர்கள் குழுவொன்றுடன் வந்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழு பேய் வீட்டிற்குச் சென்று உள்ளே நுழைந்தபோது, சவப்பெட்டியில் கிடந்த நபர் தனது கணவன் என்று அடையாளம் கண்டுள்ளார்.

சடலமாக இருந்த நபரும் பெண்ணை அடையாளம் கண்டுகொண்டதாகவும், சடலமாக இருந்தவர் உடனடியாக எழுந்து பெண்ணின் தலையில் தாக்க முயற்சித்ததாகவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணும், சடலமாக காட்சியளித்த நபரும் திருமண செய்துள்ள நிலையில், சில காலமாக பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், சட்ட ரீதியாக பிரிந்து வாழவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்ணை தாக்க முற்பட்டதையடுத்து, அவருடன் இருந்த ஏனைய இளைஞர்களும் பேய் வீட்டில் உள்ளவர்களை தாக்கியதாகவும், பேய் வீட்டில் இருந்த இளைஞர்களும் தாக்கியதால் பெரும் சண்டை ஏற்பட்டதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

அதன்படி, பேய் வீட்டை ஒழுங்குபடுத்தும் குழுவினர் முதலில் நவகமுவ பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, மற்றைய குழுவினர் பின்னர் வந்துள்ளனர்.

சம்பவத்தை ஏற்படுத்திய யுவதியின் தந்தை உயர் பொலிஸ் உத்தியோகத்தர் என்பதனால், தலையீடு செய்ததாக, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கமல் விஜேசிறி நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் ஈடுபட்ட இரு தரப்பினரையும் சேர்ந்த 6 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வெளியேறி இருப்பதும் தெரியவந்தது.



## வவுனியாவில் பாரிய தீ விபத்து:

# பெறுமதியான பொருட்கள் நாசம்

க.அகரன்

வவுனியாவிலுள்ள தொழிற்சாலையுடன் இணைந்த களஞ்சியசாலை ஒன்று திடீரென தீ பற்றிய சம்பவம் திங்கட்கிழமை (24) இடம்பெற்றுள்ளது.

வவுனியா- மரக்காரம்பளை பகுதியில் அமைந்துள்ள அலுமினியம் மற்றும் பிளாஸ்டிக்கு தொழிற்சாலை மற்றும் வீட்டு தளபாடங்களின் களஞ்சியசாலை என்பவற்றை உள்ளடக்கிய தொழிற்சாலையிலேயே இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தொழிற்சாலையில் பணி புரிந்த இருவர் சாப்பாட்டுக்காக வெளியில் சென்ற வேளையில் குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதுடன், வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் அப்பகுதி மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நீர்த்தாரை வீசி நடவடிக்கை எடுத்துள்ளனர்.

எனினும் தீ விபத்தில் தொழிற்சாலை முழுமையாக எரிந்து சாம்பலாகியுள்ளதுடன், பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் தீயில் நாசமாகியுள்ளது.

தீ விபத்துக்கான காரணங்கள் குறித்து ஈச்சங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஐஸூடன் மூவர் கைது



கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் வைத்து பாகிஸ்தானில் இருந்து அனுப்பப்பட்ட பொதி ஒன்றிலிருந்து 20 கோடி ரூபாய் பெறுமதியான ‘ஐஸ்’ போதைப்பொருளை இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் திங்கட்கிழமை (24) கைப்பற்றபட்டுள்ளது.

இதன்போது 4 கிலோ 847 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், மூவர் கைது செய்யப்பட்டதாகவும் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மதுபானசாலையை மூடுமாறு

# முற்றுகையிட்டு போராட்டம்

தீஷான் அஹமட்




மூதூர்-இருதயபுரத்தில் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையை மூடுமாறு வலியுறுத்திக் குறித்த மதுபானசாலையை முற்றுகையிட்டு செவ்வாய்க்கிழமை (25) அன்று 2ஆவது நாளாக சுழற்சிமுறை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின் போது, பொதுமக்கள் சுலோகங்களை ஏந்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எனினும், மதுபானசாலை தொடர்ந்தும் திறந்தே காணப்படுகின்றது. அத்துடன், மதுபானசாலைக்கு மதுபானம் வாங்க வருவோரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பொதுமக்கள் தடுத்து நிறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குழந்தைகளுக்கு சமூக வலைத்தள கட்டுப்பாடு அவசியம்

வீட்டு முற்றங்களில் ஓடித்திரியும், மைதானங்களில் விளையாடும் குழந்தைகளை தற்போது பார்ப்பது மிகவும் அரிதாகும். இலத்திரனியல் உபகரணங்களை வீடுகளுக்குப் படையெடுத்ததை அடுத்து, குழந்தைகள், சிறுவர்கள் மட்டுமன்றி, பெரியவர்களும் வீடுகளுக்குள்ளே முடங்கிவிடுகின்றனர்.

அதில், அலைபேசி ஒவ்வொருவரையும் தங்களுடைய கட்டுக்குள் வைத்துக் கொண்டுள்ளது. குழந்தைகள் அழும்போது, அடம்பிடிக்கும் போது, விளையாட்டுப் பொருட்கள் இன்றேல், ஏதாவது சிற்றுண்டிகளைக் கொடுத்து அன்று சமாதானப்படுத்திய தாய்மார், தற்போது அலைபேசிகளை நீட்டி அமைதியடையச் செய்துவிடுகின்றனர்.

குழந்தையென்றால் விழுந்து, விழுந்து எழ வேண்டும். அப்பொழுதுதான் அக்குழந்தைக்கு நம்பிக்கை பிறக்கும், அடுத்தடுத்த தடவைகளில் விழாமல் நடக்கக் கற்றுக்கொள்ளும், சிந்திக்கும், விழுந்தால் எழவேண்டுமென்ற துணிவு வரும். தன்னம்பிக்கை பிறக்கும், யாரையும் தங்கி இருக்காது, தானாகவே ஏதோவொன்றை செய்ய முயற்சிக்கும்.

எனினும், அலைபேசிகள் படையெடுத்ததன் பின்னர், வீடுகளுக்குள்ளே முடங்கிவிடுகின்றனர். அலைபேசி வழிகாட்டுவதைப் போலவே நடந்து வழித் தவறிவிடுகின்றனர். விழிகளையும் மங்கலடையச் செய்து கொள்கின்றனர்.

அலைபேசிகளில் இருந்து வெளியேறும் நீலநிற கதிர்கள், குழந்தைகளின் கண்களை வெகுவாக பாதிப்படையச் செய்து விடுகின்றன. 70 வயதில் மூக்குக்கண்ணாடியைப் போடவேண்டியவர்கள், ஏழு வயதிலேயே போட்டுவிடுகின்றனர். அந்தளவுக்கு அலைபேசிகளும், உடலுக்குத் தீங்கிழைக்கக்கூடிய உபகரணங்களும் மனிதனின் மணித்தியாலத்தை ஆட்கொண்டு விட்டன. குழந்தைகள் மட்டுமன்றி, பெரியவர்களும் சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாகி விடுகின்றனர்.

குழந்தைகளையும் பாடசாலை மாணவர்களையும் அதிலிருந்து தடுக்கும் நோக்கத்தோடு, அமெரிக்காவின் நியூயோர் நகர நிர்வாகம் புதிய மசோதாவைத் தாக்கல் செய்துள்ளது.

நியூயோர்க் நகர ஆளுநர் கோத்தி ஹோச்சல் கையெழுத்திட்டுள்ள அந்த மசோதாவின்படி, தங்களுடைய குழந்தைகள் என்னென்ன விடயங்களை சமூக வலைத்தளங்களில் பார்க்கலாம், எந்த நேரத்தில் பார்க்கலாம் என்பதை நிர்ணயிக்கும் உரிமை பெற்றோருக்கு வழங்கப்படுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் வாயிலாகத் தேவையில்லாத விடயங்கள் அவர்கள் மீது திணிப்பதைத் தடுக்க முடியும். அதுபோல, 18 வயதுக்கு உட்பட்டோர். சமூக வலைத்தளங்களில் பின்தொடரும் கணக்குகளில் இருந்து தணிக்கை செய்யப்பட்ட பதிவுகள் மட்டுமே பார்க்க அனுமதி வழங்கப்படும். பெற்றோரின் முன் அனுமதியுடன், எந்தெந்த விடயங்களைத் தணிக்கை செய்வது என்பதை நிர்ணயிக்க இந்த மசோதா உதவுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மசோதாவை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான விதிகள், வழிமுறைகளை, சட்டத்துறை உருவாக்கும். அதன்பின், மற்றவர்களின் கருத்துகள் கேட்கப்பட்டு, இது சட்டமாக அமலுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, இது கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக எதிர்ப்புக் குரலும் எழுந்துள்ளது. எனினும், குழந்தைகளுக்கு சமூக வலைத்தள கட்டுப்பாடு அவசியமாகும் என்பதைப் பலரும் வலியுறுத்துகின்றனர் என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நான், எனக்கு, எல்லாமே எனக்கானது என்றால் மற்றையவர்களின் நிலை என்ன? தன்னைத்தான் உயர்த்துவதற்காகப் பிறரின் உரிமைகளை, நான், எனது எண்ணம் மமதையுடன் எவரது உரிமைகளுக்குள் உள்நுழைவது சுத்த அபத்தம்!

"வளர்ச்சி" என்பது தனது முயற்சியால், எவர் நிலையையும் ஊறுபண்ணாமல் வாழும் முறைமையாகும். முன்னேற்றம் என்பது பிறரைப் பின்னுக்குத் தள்ளுவதுமல்ல.

வாழ்க்கைச் சுழற்சியில் பல விடயங்கள் வந்து போகலாம். அதுபடற்றியே பேசாமல் நடக்கின்ற காரியங்களை மட்டும் நோக்குக. அவற்றை நேர் வழியில் வாழ்ந்து காட்டுக!

நாங்கள் எவரையும் நிந்திக்காமல் அனைவருமே தேவையானவர்கள் என எண்ணியபடி வாழ்ந்தால் யாவரும் எங்களுடன் இணைந்து கொண்டேயிருப்பார்கள்.

உலகம் எமக்குப் பாரம் இல்லை. நாங்கள் பூமிக்கும் பாரமாக இருக்கலாகாது. வளர்த்த உலகை வாழ்விக்கச் சேவை செய்க.!

பொது வெளியில் எங்களைப் பிறர் உயர்நிலையில் பார்க்க முயற்சி எடுக்கத் தேவையில்லை. இயல்பாகவே, பொது நோக்குடன் உதவும் எண்ணங்களுடன் வாழ்ந்தாலே போதும். நல்லதே நடக்கும். உபகாரம் செய்தலே யோகம்.

- பருத்தியூர் பால-வயிரவநாதன்

# இது சர்வாதிகாரத்தை நோக்கிய பயணமா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

இரண்டு வருடங்களுக்கு முன்னர் 2022ஆம் ஆண்டு 22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பற்றிய விவாதத்தின் போது, உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அத்திருத்தத்தைப் பற்றி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை விமர்சித்தார்.

உயர் நீதிமன்றம் அத்திருத்தத்தின் சில விடயங்களைப் பற்றி வழங்கிய தீர்ப்பு சட்டவிரோதமானது என்றும் அந்நீதிமன்றம் சில விடயங்களைப் பற்றிய தமது நிலைப்பாட்டை அடிக்கடி மாற்றிக் கொள்கிறது என்றும் அவர் கூறினார். இறுதியில் அவர் உயர் நீதிமன்றத்தை "வீட்டுக்கு அனுப்ப வேண்டும்" (must be sent home) என்றும் கூறினார்.

இதனையடுத்து, அவ்வுரையை விமர்சித்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கடிதம் ஒன்றை எழுதிய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ விசேட பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்காது எம்.பி. ஒருவர் நீதிமன்றங்களையோ அல்லது நீதிபதிகளையோ பாராளுமன்றத்தில் விமர்சிக்க முடியாது என்பதால் சுமந்திரனின் கூற்றைப் பற்றி விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார். என்ன காரணமோ தெரியாது சபாநாயகர் அவ்வாறு தெரிவுக் க்குழுவொன்றை நியமிக்கவில்லை.

இப்போது ஜனாதிபதி ரணிலும் பாராளுமன்றத்துக்கு வந்து உயர் நீதிமன்றத்தை விமர்சித்துள்ளார். பாலியல் தொடர்பான சட்டமூலமொன்றின் சில பகுதிகள் அரசியலமைப்புக்கு முரண் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியமையே இதற்குக் காரணமாகும். கடந்த 18ஆம் தகதி இந்த விடயத்தைப் பற்றி பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி உயர் நீதிமன்றத்தின் செயல் "ஜூடிஷல் கனிபலிசம்" (Judicial cannibalism) என்றார். ஜூடிஷல் என்றால் நீதித்துறை என்பதாகும். ஓர் உயிரினம் தம்மினத்தின் மாமிசத்தை உண்பதையே கனிபலிசம் என்ற ஆங்கில சொல்லின் பொதுவான அர்த்தமாகும். ஜனாதிபதி பாவித்த அச்சொல்லுக்கு இப்போது பலர் பல்வேறு விரைவிலக்கணங்களை வழங்கி வருகின்றனர்.

அன்றே பாராளுமன்றத்தில் உரையாற்றிய நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஜனாதிபதியின் கூற்றின் காரத்தைக் குறைக்க முயன்றார். நீதிமன்றம் பாராளுமன்றத்தின் அதிகாரத்தை அபகரித்துள்ளது என்ற அர்த்தத்திலேயே ஜனாதிபதி அச்சொல்லைப் பாவித்தார் என்று தாம் நம்புவதாக அவர் கூறினார்.

இந்தத் தீர்ப்புக்காக சம்பந்தப்பட்ட நீதியரசர்களைப் பாராளுமன்றத்துக்கு அழைத்து விசாரிக்க வேண்டும் என்று தாம் கூறவில்லை என்றும் ஆயினும், அதனை விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்றும் அதற்குப் பாராளுமன்றத்தின் பெண் உறுப்பினர்களில் பெரும்பாலானோரை நியமிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தமது உரையின் போது கூறினார்.

ஜனாதிபதியின் இக்கருத்தை எதிர்க்கட்சியினரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் விமர்சித்துள்ளன. ஜனாதிபதி பாராளுமன்ற சிறப்புரிமைகளைப் பாவித்தும் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்ற ரீதியிலும் நீதிமன்றத்தை மிரட்டுகிறார் என்றும் அது நீதித்துறையின் சுயாதினத்தன்மைக்கு அச்சுறுத்தலாகும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் கூறியிருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயர் நீதிமன்றத்தை "வீட்டுக்கு அனுப்ப வேண்டும்" என்று கூறிய சுமந்திரன் இம்முறை உயர் நீதிமன்றத்தின் பக்கம் நின்று வாதிட்டார். உயர் நீதிமன்றம் சட்டமூலங்களைப் பற்றி தாம் விரும்பும் தீர்ப்பை வழங்காத போதெல்லாம் அதனை விசாரிக்க தெரிவுக் குழுக்களை நியமிப்பது ஆரோக்கியமான செயலல்ல என்று அவர் கூறினார். இச்சட்ட மூலத்தை மீண்டும் உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்காக அனுப்பலாம் என்று அவர் ஆலோசனையும் வழங்கினார். பதினொரு வருடங்களுக்கு முன்னர் 2013இல் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராகக் குற்றப் பிரேரணையொன்றை முன்வைக்கப்பட்டது. அப்போது அது தொடர்பாகப் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்று விசாரணை நடத்தியது. அக்குழுவின் உறுப்பினராக சிராணி பண்டாரநாயக்கவை மிக மோசமாக நடத்திய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஜனாதிபதியின் கூற்றைப் பற்றிக் குறிப்பிடுகையில் உயர் நீதிமன்றம் நாம் விரும்பாத தீர்ப்புக்களை வழங்கும் போதெல்லாம் அதனை விசாரிக்க தெரிவுக் குழுக்களை நியமிப்பதாக இருந்தால் உயர் நீதிமன்றம் ஒன்று எதற்கு என்று கேள்வி எழுப்பினார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் சுமந்திரன் உயர் நீதிமன்றத்தை விமர்சித்த போது, அவரது செயலை விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக் குழு நியமிக்க வேண்டும் என்ற விஜேதாச ஜனாதிபதி அதனையே செய்த போது தாமும் ஜனாதிபதிக்கு ஆதரவாகப் பேசினார். அன்று உயர் நீதிமன்றத்தை விமர்சித்தவரை விசாரிக்கத் தான் அவ்வாறான தெரிவுக் குழு நியமிக்கப்பட வேண்டும் என்று விஜேதாச கூறினார்.

இப்போது உயர் நீதிமன்றத்தை விமர்சித்தவரே உயர் நீதிமன்றத்தின் செயலை விசாரிக்க தெரிவுக் குழு நியமிக்க வேண்டும் என்கிறார். விஜேதாச அதனை எதிர்க்கவில்லை.

அன்று சுமந்திரன் உயர் நீதிமன்றத்தை விமர்சித்த போது, அது பாராளுமன்றத்துக்கும் நீதிமன்றத்துக்கும் இடையே பகையை உருவாக்கும் செயல் என்றும் அவரது விமர்சனத்தினால் நீதிமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாக பாதிக்கப்பட்டதாகவும் ஒரு சட்டத்தரணி என்ற முறையில் சுமந்திரன் தவறான முன்னுதாரணமாக நடந்து கொள்கிறார் என்றும் அவர் எம்.பிக்களின் சிறப்புரிமையைக் கவசமாகப் பாவிக்கிறார் என்றும் அவரது கூற்றினால் மக்கள் சகல எம்.பிக்களையும் வெறுக்கலாம் என்றும் எனவே, அது ஏனைய எம்.பிக்களின் சிறப்புரிமையை மீறிய செயலாகும் என்றும் விஜேதாச, சுமந்திரன் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்டு போனார். அவர் அன்று சுமத்திய அத்தனை குற்றச்சாட்டுக்களும் இன்று ஜனாதிபதி விடயத்திலும் பொருந்துகின்றன என்பது எவராலும் புரிந்துகொள்ள முடிகிறது. சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், அவை அரசியலமைப்போடு ஒத்துப் போகின்றனவா என்பதைப் பரிசீலிக்க அவை உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படுகின்றன.

சில சட்டங்களின் சில வாசகங்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என்றும் அவற்றைத் திருத்த வேண்டும் இல்லாவிட்டால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளாலோ அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளோடு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியோ அதனை நிறைவேற்ற வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்.

ஆனால், தாம் விரும்பும் சட்டமூலங்களின் சகல வாசகங்களையும் உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி கருதுகிறார். அதனால் தான் பாலியல் தொடர்பான மேற்படி சட்டமூலத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளாததற்காக அவர் உயர் நீதிமன்றத்தை விமர்சிக்கிறார்.

அதேபோல், உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதற்கு முன்னர் அதற்கான பரிந்துரையை ஜனாதிபதி அரசியலமைப்புப் பேரவைக்கு அனுப்பி அதன் ஒப்புதலைப் பெற வேண்டும். ஜனாதிபதிகள் எதேச்சாதிகாரமாக நடந்துகொள்வதைத் தடுக்கவும் தமது நண்பர்களை மட்டும் உயர் பதவிகளுக்கு நியமிப்பதைத் தடுக்கவுமே இந்த விதிமுறை இருக்கிறது.

இது 17ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட விதியாகும். அவ்விதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 18ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் நீக்கினார். அது மீண்டும் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் 2015இல் மீண்டும் கொண்டுவரப்பட்டது. கொண்டு வந்தவர் அப்போதை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவே.

சிலவேளைகளில் அரசியலமைப்புப் பேரவை ஜனாதிபதியின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், தமது பரிந்துரைகள் அனைத்தையும் அரசியலமைப்புப் பேரவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கருதுகிறார். கடந்த நவம்பர் மாதம் அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரை உயர் நீதிமன்றத்துக்கு நியமிக்கப் பரிந்துரை செய்து அப்பரிந்துரையை அரசியலமைப்புப் பேரவைக்கு அனுப்பினார்.

அப்பேரவை அதனை நிராகரித்தது. அதனால் கோபங்கொண்ட ஜனாதிபதி, பாராளுமன்றத்துக்கு வந்து அரசியலமைப்புப் பேரவையை விமர்சித்தார். அப்பேரவையின் செயற்பாடுகளைப் பற்றி விசாரிக்கப் பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்றும் கூறினார்.

பாராளுமன்ற தெரிவுக் குழுக்களின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். தற்போதைய நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். வெளியில் எவ்வாறு பேசினாலும் பொதுஜன முன்னணி தொடர்ந்தும் ஜனாதிபதிக்கு ஆதரவளித்தே வருகிறது. எனவே, அக்குழுக்கள் மூலம் நீதிமன்றத்துக்கும் அரசியலமைப்புப் பேரவைக்கும் எதிராக விசாரணைகளை நடத்தி தமக்கு வேண்டிய தீர்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் நோக்கிலேயே இவ்வாறு ஜனாதிபதி எடுத்ததற்கெல்லாம் பாராளுமன்ற தெரிவுக் குழு நியமிக்கப்பட வேண்டும் என்கிறார் போலும். இதற்கு முன்னரும் உயர் நீதிமன்றம் இந்த அரசாங்கத்தினால் அச்சுறுத்தப்பட்டுள்ளது. கடந்த வருடம் ஜனவரி மாதம் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்தத் தீர்மானித்த போது, ஜனாதிபதியின் கீழ் இருக்கும் நிதி அமைச்சு அதற்கான நிதியினை வழங்க மறுத்தது.

அதனை எதிர்த்து ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்த மனுவொன்றை விசாரித்த உயர் நீதிமன்றம் வரவு-செலவுத் திட்டத்தால் தேர்தல்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியினை தடுத்து வைத்திருக்கக் கூடாது என்று கடந்த வருடம் மார்ச் மாதம் 3ஆம் திகதி நிதி அமைச்சின் செயலாளரைப் பணித்து இடைக்கால உத்தரவை வழங்கியது.

இதனையடுத்து, அத்தீர்ப்பு பாராளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறிய செயல் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி தொலவத்த பாராளுமன்ற ஒழுக்காற்று மற்றும் சிறப்புரிமை குழுவிடம் முறையிட்டார். சம்பந்தப்பட்ட நீதியரசர்களை அக்குழு முன் அழைத்து விசாரிக்க வேண்டும் என்றும் அவர் பாராளுமன்றத்தில் கூறினார்.

அவர் யாருக்காக வாதாடினார் என்பது சகலருக்கும் தெரியும். நாடு எங்கே போகிறது என்பதையே இச்சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

## கடிதங்கள்

### குளவி கூட்டை அகற்றவும்



தலவாக்கலை பேருந்து நிலைய கட்டிடத்தில் குளவி கூடு கட்ட பட்டுள்ளதால் பயணிகள் மிகவும் அச்சம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.


பேருந்து நிலைய கட்டிடத்தில் பெரிய குளவி கூடு இருப்பதாகவும், குளவி கூட்டை சுற்றி பறவைகளின் கூடுகள் காணப்படுவதாகவும், பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், பேருந்து நிலையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கடைகளுக்குப் பாடசாலை மாணவர்கள் உட்பட ஏராளமானோர் தொடர்ந்து செல்கின்ற நிலையில், குளவி கூடு இருப்பதால் அங்கு வருபவர்கள் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, தலவாக்கலை நகர மக்கள் பாதுகாப்பு கருதி குளவி கூட்டை விரைவில் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொறுப்பான திணைக்களத்தினரிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றன

- கெ.தி.பெருமாள்

# முகில்களுக்குள் மிதந்த நாள்



சி.கதீசனா,
ஊடகக் கற்கைகள்,
யாழ். பல்கலைக்கழகம்.



2019 க.பொ.த உயர் தரப்பரீட்சை முடிவடைந்துள்ளமை பெரிய திருப்தி. அப்போது எனக்கு வயது 19. பரீட்சை முடிந்து விட்டது ஆனாலும், சந்தோஷம் இல்லை. பரீட்சைக்கு எழுதிய விடைகள் பற்றியே மீண்டும் மீண்டும் ஞாபகங்கள் மீட்டிக் கொண்டிருந்தன. எங்கேயாவது சுற்றிப் பார்த்து மனதைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஆசை இருந்தது.

பரீட்சை முடிந்து ஒரு மாதமும் 20 நாட்களும் ஆகிவிட்டன. ஆயினும் எங்கும் செல்லவில்லை என்ற ஏக்கம். அப்பாவிடம் எனது ஆதங்கத்தைத் தெரிவித்தேன். எனது மனதின் காயத்துக்கு மருந்தாக அப்பா இந்தியாவிற்குச் செல்வோமா? என கேட்டார். சட்டென்று ஒரு ஆனந்தமும் அதனோடு, இணைந்து இது நிஜமா? கனவா? என்ற கலக்கமும் மீண்டும் கேட்டேன் என்னப்பா கூறுகின்றீர்கள் என்று இந்தியா செல்வோமா? என்று கேட்டேன் என்றார். எனக்குப் பெரிய மகிழ்ச்சி, நான் சட்டென்று ஆம் பதில் அளித்தேன்.

இந்தியா செல்வதற்கு எனக்கு கடவுச்சீட்டு இல்லை, இரண்டு நாட்களிற்குப் பின் நானும், அப்பாவும் கொழும்பு சென்று ஒரே நாளில் கடவுச்சீட்டை எடுத்துக் கொண்டோம்.

பின்னர் விசாவிற்கு விண்ணப்பித்திருந்தோம். விசாவும் வந்து விட்டது. 2019.10.20ஆம் திகதி காலை 8 மணியளவில் எமக்குரிய விமானத்தில் புறப்பட வேண்டும். நாங்கள் 2019 10.19ஆம் திகதி இரவு 10 மணி அளவில் விட்டிலுள்ளோருக்குப் பயணம் சொல்லிவிட்டு ஹயஸ் வாகனத்தில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம். பத்தாம் மாதம் 20ஆம் திகதி காலை 4 மணியளவில் விமான நிலையத்திற்குச் சென்று விட்டோம். விமானத்தில் நான் முதல் தடவை செல்வதனால் எனக்கு சிறு பதற்றம் இருந்தது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் உள்ளே சென்றவுடனே சிறியதொரு சுற்றுலா சென்ற மாதிரியே உணர்வு இருந்தது. எமக்குரிய சோதனை முடிந்தவுடன் போர்டிங் பாஸ் (boarding pass) எடுக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டும். இடையில் சோதனை செய்து விட்டு வரும் இடத்தில் முதல் தடவை இந்தியா செல்வதனால் ஏன் செல்கிறீர்கள் என்ற கேள்வியை ஆங்கிலத்தில் கேட்டார்கள்.

நானும் பதிலைக் கூறிவிட்டு அப்பாவின் பின்னே சென்றேன். நானும் அப்பாவும் போர்டிங் பாஸ் எடுக்கும் இடத்திற்குச் சென்றோம். விமான நிலையத்தில் கிடைத்த முதல் அனுபவம் மூவிங் ஸ்ரெப்பில் (moving step) ஏற வேண்டும். சற்று பயமாகவே இருந்தது. ஏதோ ஏறிச் சென்று விட்டேன்.

போர்டிங் பாஸ் எடுக்கும் இடத்திற்குச் செல்ல முதல் குடிவரவு, குடியகல்வு எனும் அட்டையினை நிரப்பிக் கொண்டு செல்ல வேண்டும் என அப்பா கூறினார். அவ்விடம் சென்று அவ் அட்டையை நிரப்பிக் கொண்டு மீண்டும் போர்டிங் பாஸ் எடுக்கும் இடத்திற்கு வரிசையில் வந்தோம். நாம் கொண்டு சென்ற பொதிப் பையை அருகிலிருந்த நிறை சோதனை செய்யும் இடத்தில் வைத்துவிட்டு கடவுச்சீட்டைக் கொடுத்தேன்.

அதில் நாம் கொண்டு சென்ற பொருட்களின் நிறை சரியாக இருந்ததால் எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் போர்டிங் பாஸ் வழங்கப்பட்டது.அதிலே கேற் நம்பர், சீற் நம்பர், பிளைற் நம்பர், போர்டிங் நேரம் என்பன போடப்பட்டிருந்தது. நாங்கள் அதில் உள்ள கேற் நம்பரினைப் பார்த்து அவ் இடத்திற்கு முன் சென்றுவிட்டோம். விமான நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த தொலைக்காட்சியில் வந்திறங்கிய விமானங்களின் விபரமும் இருபுறப்படவுள்ள விமானங்களின் விபரமும் இடப்பட்டிருந்தன.

நாம் செல்லவுள்ள விமானத்தின் நேரம் எமது போர்டிங் கார்ட்டில் உள்ள நேரத்தினை விட ஒரு மணித்தியாலம் பிந்திக் காணப்பட்டது. அதிலிருந்த சிலரிடம் கேட்டபோது மழை காரணமாகப் பிந்தியது என்றார்கள் ஆம் நாம் சென்ற காலப்பகுதி மழைக்காலம் என்பதனால் அந்த ஒரு பிரச்சினை காணப்பட்டது. நானும் அப்பாவும் நமக்குரிய கேட் நம்பர் (Gate) உள்ள வாயிலில் காத்துக்

கொண்டிருந்தோம். எமக்குரிய கேட் திறக்கப்பட்டது. வாயிலிலே சோதனை செய்யும் நபர் நின்றார் அவர் என்னிடம் உள்ள ஆவணங்களை வாங்கி பார்த்து விட்டு நான் கையில் வைத்திருந்த சிறிய கைப்பையினையும் சோதனை இடத்தில் வைக்கச் சொன்னார் இடையில் ஒரு பெண் என்னை முழுவதும் சோதனை செய்து உள்ளே செல்ல அனுமதித்தார்.

பின்னர் இருவரும் எம்முடைய விமானத்திற்கு ஏறுவதற்காக உள்ளே காத்துக் கொண்டிருந்தோம். விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. விமானங்கள் புறப்படுவதை இருக்கைகளில் இருந்தவாறு அவதானித்துக் கொண்டிருந்தேன்.

முதல் அனுபவம் என்னால் முற்றிலும் மறக்க முடியாத அனுபவமாகும். நாம் புறப்படுவதற்கான நேரம் வந்துவிட்டது என எம்மோடு இருந்தவர்கள் விமானம் நிற்கும் இடத்தினை நோக்கிச் சென்றனர் நாமும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றோம். விமானத்தில் நுழையும் வாசலில் மிகவும் அழகான இரு பெண்கள் கைகூப்பி வணக்கம் கூறினர்.

ஆனால் நான் அவதானித்ததில் அவர்களுக்குரிய பதில் வணக்கத்தினை சிலரே கூறினார்கள். நானும் வணக்கம் கூறிவிட்டு என்னுடைய சீட் நம்பரைத் தேடிச் சென்றோம் நம்பரைக் கண்டுபிடித்து விட்டேன் அப்பாவின் சீட் நம்பரும் எனக்கருகிலேயே இருந்தது. உள்ளே ஏறியவுடன் நடுக்கத்தோடு குளிராக இருந்தது.

விமானத்தின் ஜன்னல் ஓர இருக்கையில் நான் அமர்ந்து கொண்டேன். 19 வருடத்தில் எனக்கு புதிய அனுபவமாக இருந்தது. ஏதோ இனம் புரியாத உணர்வு என்னை மூடிக் கொண்டது. விமானத்தின் நடுவிலே சீட் பெலிற் அணியச் சொல்லி ஆங்கிலத்தில் மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டு சென்றனர்.

நான் அவற்றை முழுவதுமாய் செவிமடுத்தேன், விமானத்தின் சில நடைமுறைகளைக் கூறினார்கள். சிலவற்றை என்னால் விளங்கிக் கொள்ளமுடிந்தது.

விமான கண்ணாடி ஜன்னல் வழியே வெளியே நிறுத்தப்பட்டிருந்த விமானங்களையும், புறப்பட்டுச் செல்லும் விமானங்களையும் அவதானித்துக் கொண்டிருந்தேன். எங்களுடைய விமானம் புறப்படத் தயாராகிவிட்டது.

நான் சீட் பெலிற் அணிந்து கொண்டு ஆவலோடு இருந்தேன். விமானம் தரையில் ஓடுவது போலிருந்தது. ஒரு நிமிடத்தின் பின் ஒரு சிறிய அசைவோடு மேலே விமானம் பறக்கத் தொடங்கியதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அருகில் உள்ளவர்களைப் பார்த்தேன் அவர்கள் சாதாரணமாகவே இருந்தார்கள்.

விமானம் பறக்கத் தொடங்கி சிறிய நேரத்தில் உணவு தரப்பட்டது. ஏனையவர்கள் எவ்வாறு உண்கிறார்கள் என்பதைப் பார்த்து நானும், அப்பாவும் உண்ணத் தொடங்கினோம்.

பின்னர் விமானத்தின் ஜன்னல் வழியே கீழே பார்த்தேன் முழுவதும் பச்சைக் காடாகவே இருந்தது. ஒரு மணித்தியாலம் 10 நிமிடத்தில் சென்னை விமான நிலையத்தினை சென்றடைந்தது, என்னடா வேகமாக விமானம் வந்திட்டே என்ற ஒரு சிறிய சங்கடம். இறங்குவதற்கு முன் விமானம் தரையிறங்கப் போகிறது என்பதை விமானத்தின் அசைவை வைத்துத் தெரிந்து கொண்டேன்.

சென்னை விமான நிலையத்திற்குள் அப்பாவின் கையைப் பிடித்தபடி வந்தேன். நாம் செய்ய வேண்டிய நடைமுறைகளை முடித்துவிட்டு எமது லக்கேஜினையும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தோம். வெளியே நிறைய மக்கள் அவர்களுடைய

உறவினர்களுக்காகக் காத்திருந்தனர். அருகில் நின்ற ஒரு Taxi வாகனத்தைப் பிடித்துக் கொண்டு வலசலவாக்கத்திலுள்ள அப்பாவின் நண்பர் வீட்டிற்குச் சென்றோம்.

நண்பர் வீட்டிற்குச் சென்றவுடன் எங்களுக்குரிய வரவேற்பு சிறப்பாக இருந்தது. எல்லாம் புதிதாக இருந்தன மறு நாள் சுற்றிப் பார்க்க வேண்டும் . கடைகளுக்குச் சென்றோம். அடுக்குமாடிகள் என எமது ஊரிலும் சற்றும் வேறுபட்டதாக இருந்தது அவர்களது பேச்சுக்கள் எமது பேச்சிலிருந்து மாறுபட்டிருந்தது நமது பேச்சினை வைத்து பலரும் நீங்கள் ஸ்ரீலங்காவா ? என எங்களைக் கேட்டார்கள் அவர்களுடைய பேச்சுக்கள் நமது மொழிநடையிலும் சற்று வேறுபட்டிருந்தது.

3ஆம் நாள் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசையில் நானும் அப்பாவும், அப்பாவின் நண்பர் குடும்பமும் திருச்சிக்குச் சென்றோம். செல்லும் பாதையில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிற்குச் சென்றோம் உச்சிப் பிள்ளையார் கோயில் கிருஷ்ணன் கோயில் போன்ற கோயில்களுக்குச் சென்று திருச்சியைச் சுற்றிப் பார்த்து அன்றைய நாளினை மகிழ்வோடு கழித்தோம்.

நான்காம் நாள் சில பொருட்கள் வாங்க மண்ணடி எனும் இடத்திற்குச் சென்றோம் அங்கே சற்று நெரிசலாகவும் மக்கள் தொகை அதிகமாகவும், வீதிகளின் கரையெங்கும் கடைகளாகவும் இருந்தன. அங்கு கேரளா போன்ற வேறு மாநில மக்களினையும் பார்க்க முடிந்தது. அனைத்து வகையான கடைகளும் இருந்தன. அங்கே சில்லறையாகவும் மொத்தமாகவும் பொருட்களினை வாங்கக் கூடியதாக இருந்தது.

நாங்கள் சென்ற காலப்பகுதி மழைக்காலம் என்பதால் சற்று சேறும் சகதியுமாக இருந்தது. அன்றைய நாள் முழுவதும் மண்ணடி என்னும் இடத்திலே கழிந்தது. மறுநாள் மெரினா கடற்கரைக்குச் சென்று ஜெயலலிதாவின் நினைவிட வளாகத்திற்குச் சென்றோம். சில புதிய மனிதர்களைச் சந்தித்தோம் சில புதிய அனுபவங்கள் கிடைத்தது.

இவ்வாறு சுற்றிப் பார்த்தலோடு நாட்கள் நகர்ந்தன. எப்படி நாட்கள் நகர்ந்தன என தெரியவில்லை 14 நாட்கள் வேகமாக நகர்ந்தன. 14 நாட்களின் அனுபவத்தில் இன்னும் பகிர்ந்து கொள்ள ஏராளம் உள்ளன. இலங்கை திரும்பும் திகதி வந்தவுடன் சுற்றுலாப் பயணம் முடிந்ததே என்று சற்று கவலையோடு நிறைய புதிய நண்பர்கள் கிடைத்த மகிழ்ச்சியிலும் நிறையத் தெரியாத விடயங்களினை தெரிந்து கொண்ட சந்தோசத்திலும் 2019.11.05 இலங்கைக்குத் திரும்பினோம்.

# 'சோழன்' உலக சாதனை படைத்த 3 வயது சிறுவன்





கம்பஹா மாவட்டத்தின் ஹுனுபிட்டிய பகுதியில் வசித்து வரும் மொஹமட் ஷபான் மற்றும் பாத்திமா இபாஸா ஆகியோரின் மகன் 3 வயதான மொஹமட் ஷம்லான் 1,098 உருவப் படங்களை அடையாளம் சோழன் காட்டி உலக சாதனை படைத்துள்ளார்.

'பீபில்ஸ் ஹெல்பிங் பீபில்ஸ் பவுண்டேஷன்' உடன் இணைந்து 'சோழன் உலக சாதனை' புத்தக நிறுவனம் நடத்திய உலக சாதனை படைக்கும் முயற்சியில் , இச்சிறுவன் உலக சாதனை படைத்துள்ளார்.

இவர் எண்கள், பூக்கள், பழங்கள், பறவைகள், விலங்குகள், தானியங்கள், மரக்கறி வகைகள்,மனித உடலின் உள் உறுப்புகள், ஊர்வன, பூச்சிகள், பூக்கள், மீன்கள், சிங்கள, ஆங்கில, அரேபிய மொழி எழுத்துகள், அரசியல் தலைவர்கள், பல்வேறு தொழில்கள், உலகப் புகழ் பெற்ற கோபுரங்கள், புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்கள், தேசிய வீரர்கள்,உணவு வகைகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் என 1098 உருவப் படங்களை அடையாளம் காட்டி அவற்றின் பெயர்களைக் கூறி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணி ராஜா மற்றும் கண்டி மாவட்டத்தின் துணைத் தலைவர் சந்திரமோகன் போன்றோர் நடுவர்களாக இருந்து சிறுவனை முறையாகப் பரிசீலனை செய்து உலக சாதனையாகப் பதிவு செய்தார்கள்.

# உபகரணங்கள் வழங்கி வைப்பு...





கற்றல் உபகரண தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நுரைச்சோலை தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் வைத்து திங்கட்கிழமை (24) இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமமின் எண்ணத்தில் உதயமான "அறிவால் உலகை ஆள்வோம், அறிவார்ந்த சமூகமே எமது இலக்கு" என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக்கொண்ட, புத்தளம் பீ.சீ.எம்.எச்.நிதியத்தின் பங்களிப்புடன் இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

- எம்.யூ.எம்.சனூன்





# வாழ்வாதார உதவிகள்...

முஸ்லீம் ஹாண்ட் ஸ்ரீலங்கா அமைப்பின் ஒழுங்கமைப்பில் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராலயத்தின் அனுசரணையில் மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை(24) இடம் பெற்றது.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் பகீம் முல் அசீஸ் பங்குபற்றுதலுடன் முசலி பிரதேச செயலக பிரிவில் உள்ள மரிச்சுக்கட்டி பகுதியைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு மேற்படி வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- எஸ்.ஆர்.லெம்பேட்



# கலந்துரையாடல்...

வடமேல் மாகாணத்தின், உள்ளூராட்சி மன்றங்களில் ஒப்பந்தப் பணியாளர்களாகக் கடமையாற்றும் 1,200க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுப்பது தொடர்பான கலந்துரையாடல் , வடமேல் மாகாண ஆளுனர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (24) நடைபெற்றது.

- எம்.யூ.எம்.சனூன்



# செயலாளர் நியமனம்

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் வாகன போக்குவரத்து, கட்டிடங்கள் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின் இணைப்பு, நீர் விநியோகம் ஆகிய ஏழு துறைகளுக்கான அமைச்சின் செயலாளராக. கலாநிதி மூ.கோபாலரத்தினம் (மூகோ) நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்த நியமனத்தை அவரது அலுவலகத்தில் வைத்து திங்கட்கிழமை (24) பிற்பகல் வழங்கியுள்ளார்.



# டெப் கணினிகள் கையளிப்பு

பதுளை மாவட்டத்தின், லுணுகலை பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணா இந்துக் கல்லூரிக்கு, 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான டெப் கணினிகளை, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கையளித்துள்ளார்.

ஒட்டாவா

### காலிஸ்தான் பயங்கரவாதிக்கு

# மவுன அஞ்சலி; பிரதமருக்கு எதிர்ப்பு

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் சுட்டு கொல்லப்பட்ட காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜாருக்கு ஜூன் 18ஆம் திகதி அந்நாட்டு பாராளுமன்றத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதற்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சியின் எம்.பி. சந்திரா ஆர்யா எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நாளிதழுக்கு அளித்த செவ்வியில் கூறியுள்ளதாவது, “பாராளுமனறத்தில் மௌன அஞ்சலி செலுத்த வேண்டும் என முடிவு செய்தால், கனடாவுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த சிறப்பு மிக்கவர்களுக்கு அதை செய்திருக்க வேண்டும்.

ஹர்திப் சிங் நிஜ்ஜார் அந்த மாதிரி எதையும் செய்யவில்லை. அவரது கொலையில் வெளிநாட்டு அரசை குற்றம் சாற்றிவிட்டு அவரை புகழ்வது சரியானது அல்ல” இவ்வாறு சந்திரா ஆர்யா கூறினார்.

சந்திரா ஆர்யா, கனடாவின் நெபியான் பகுதியில் இருந்து எம்.பியாக தெரிவு செய்யப்பட்டவர். பிரதமர் மோடியுடன் நட்புடன் உள்ள இவர், கனடாவில் காலிஸ்தான் பயங்கரவாத அமைப்பு செயல்படுகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருவள்ளூர்

### வழிப்பறி செய்த 5 பேருக்கு

# 10 ஆண்டுகள் சிறை



திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அடுத்த புதுவாயலைச் சேர்ந்த திருச்செல்வம் என்பவர் கடந்த 2017ஆம் ஆண்டு அவர் பணிபுரியும் கடையின் விற்பனை பணம் ரூ.12 இலட்சத்தை எடுத்து கொண்டு இரவில் மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார்.

அப்போது, கும்மிடிப்பூண்டி வழியே ராகவரெட்டிமேடு பகுதிக்கு செல்லும்போது, ஆள் நடமாட்டமில்லாத பகுதியில் காரில் வந்த 5 பேர் கொண்ட கும்பல் மோட்டார் சைக்கிளை இடித்து தள்ளி அவரிடம் கத்தியை காட்டி மிரட்டி, 12 இலட்சம் பணத்தை வழிப்பறி செய்து தப்பிச் சென்றது.


இது குறித்து கும்மிடிப்பூண்டி பொலிஸார் வழக்கு பதிவு செய்து சோழவரம் அருண், புழல் பக்ருதீன், மீஞ்சூர் பகுதியைச் சேர்ந்த மதன்குமார், அருண், ஜெய்சீலன் ஆகியோரை கைது செய்து அவர்களிடமிருந்து 6 இலட்ச ரூபாய் பறிமுதல் செய்தனர்.

வழக்கு விசாரணை பொன்னேரி கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கு விசாரணைக்கு வந்ததும் குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில், வழக்கை விசாரித்த நீதிபதி பிரேமாவதி குற்றவாளிகளுக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், 1,000 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். இதனையடுத்து, 5 பேரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மதுரை

### போதையில் எட்டுமாத பெண் குழந்தையை

# அடித்துக் கொன்ற கொடூர தந்தை



போதையில் 8 மாத பெண் குழந்தையை வீதியில் அடித்து கொன்ற தந்தையை, பொலிஸார் கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மதுரை சோழவந்தான் பசும்பொன் நகர் பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் மற்றும் நாகசக்தி தம்பதிக்கு கிஷாந்த் (1.5 வயது) என்ற மகனும், நிதன்யாஸ்ரீ (8 மாதங்கள்) என்ற மகளும் இருந்துள்ளனர்.

போதைக்கு அடிமையான விக்னேஷ், மனைவியுடன் அடிக்கடி தகராறில் ஈடுபட்டுள்ளார். இதனால் அவர் மனைவி, இரண்டு குழந்தைகளை அழைத்துக் கொண்டு கடந்த 3 நாட்களுக்கு முன்பு தனது பாட்டி வீட்டிற்கு சென்றுள்ளார். இதை அறிந்த விக்னேஷ், மதுபோதையில் அங்கு சென்று மனைவியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

தொடர்ந்து அங்கிருந்த தன் மகனை தூக்கிக்கொண்டு அடுத்த தெருவில் உள்ள உறவினர் வீட்டில் விட்டுவிட்டு வந்துள்ளார். பின் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த 8 மாதங்களேயான மகள் நிதன்யாஸ்ரீயை தூக்க முயன்றுள்ளார்.

அப்போது அருகில் இருந்தவர்கள் தடுத்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த விக்னேஷ், நிதன்யாஸ்ரீயை சோழவந்தான் வீதியில் தூக்கி தரையில் அடித்துள்ளார்.

இதனால் அக்குழந்தைக்கு தலை மற்றும் உடல் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில், அங்கிருந்தவர்கள் உடனடியாக குழந்தையை சோழவந்தான் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். அதன் பின்பு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு குழந்தையை கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு குழந்தையை பரிசோதனை செய்த மருத்துவர்கள், குழந்தைக்கு பலத்த காயம் இருப்பதை அறிந்து சந்தேகமடைந்து பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

இந்நிலையில், பொலிஸார் குழந்தைக்கு எவ்வாறு பலத்த காயம் ஏற்பட்டது என விசாரணை மேற்கொள்ளும் பொழுது அதீத போதையில் விக்னேஷ், குழந்தையை கொலை செய்தது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து அவரை கைது செய்த பொலிஸார் கொலை வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

### இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்: அவுஸ்திரேலியாவை வென்று




# அரையிறுதிப் போட்டியில் இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

சென். லூசியாவில் திங்கட்கிழமை (24) நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான குழு ஒன்று சுப்பர்-8 சுற்றுப் போட்டியில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் மிற்செல் மார்ஷ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, அணித்தலைவர் றோஹித் ஷர்மாவின் 92 (41), சூரியகுமார் யாதவ்வின் 31 (16), ஷிவம் டுபேயின் 28 (22), ஹர்திக் பாண்டியாவின் ஆட்டமிழக்காத 27 (17) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஜொஷ் ஹேசில்வூட் 4-0-14-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 206 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா சார்பாக ட்ரெவிஸ் ஹெட் 76 (43), மார்ஷ் 37 (28), கிளென் மக்ஸ்வெல் 20 (12) ஓட்டங்களைப் பெற்றபோதும் அர்ஷ்டீப் சிங் (3), குல்தீப் யாதவ் (2), அக்ஸர் பட்டேல், ஜஸ்பிரிட் பும்ராவிடம் விக்கெட்டுகளை இழந்து 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களையே பெற்று 24 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஷர்மா தெரிவானார்.




### இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

# வெளியேற்றப்பட்ட அவுஸ்திரேலியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து அவுஸ்திரேலியா வெளியேற்றப்பட்டுள்ளது.

சென். வின்சென்டில் செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்ற பங்களாதேஷுடனான சுப்பர்-8 குழு ஒன்று போட்டியில் ஆப்கானிஸ்தான் டக்வேர்த் லூயிஸ் ஸ்டேர்ன் முறையில் எட்டு ஓட்டங்களால் வென்ற நிலையிலேயே அவ்வணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறிய நிலையிலேயே அவுஸ்திரேலிய அணி தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

ஸ்கோர் விவரம்:


நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான்: 115/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 43 (55), ரஷீட் கான் ஆ.இ 19 (10), இப்ராஹிம் ஸட்ரான் 18 (29), அஸ்மதுலாஹ் ஓமர்ஸாய் 10 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரிஷாட் ஹொஸைன் 3/26 [4], தஸ்கின் அஹ்மட் 1/12 [4], முஸ்தபிசூர் ரஹ்மான் 1/17 [4], ஷகிப் அல் ஹஸன் 0/19 [4])

பங்களாதேஷ்: 105/10 (17.5/19 ஓவ.) (வெ.இ: 114) (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் ஆ.இ 54 (49), தௌஹிட் ஹிரிடோய் 14 (09), சௌமியா சர்கார் 10 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரஷீட் கான் 4/23 [4], நவீன்-உல்-ஹக் 4/26 [3.5], பஸல்ஹக் பரூக்கி 1/15 [2], நூர் அஹ்மட் 0/13 [4], மொஹமட் நபி 0/15 [2])

போட்டியின் நாயகன்: நவீன்-உல்-ஹக்

இந்நிலையில் ட்ரினிடாட்டில் வியாழக்கிழமை (27) காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவை ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.




### யூரோ கிண்ணத் தொடர்:


# விலகல் முறையிலான சுற்றில் இத்தாலி

**இங்கிலாந்து, பிரான்ஸ், நெதர்லாந்தும் தகுதி பெற்றன**

ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரின் இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுக்கு நடப்புச் சம்பியன்களான இத்தாலி தகுதி பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்ற குரோஷியா, இத்தாலிக்கிடையேயான குழு பி போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தமையையடுத்தே இறுதி 16 அணிகளுக்கு இடையிலான விலகல் முறையிலான சுற்றுக்கு இத்தாலி தகுதி பெற்றுள்ளது. இத்தாலி சார்பாகப் பெறப்பட்ட கோலை மட்டியா ஸக்கனி பெற்றதோடு, குரோஷியா சார்பாகப் பெறப்பட்ட கோலை லூகா மோட்ரிச் பெற்றிருந்தார்.

இந்நிலையில், மற்றைய குழு பி போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் ஸ்பெய்னிடம் அல்பானியா தோற்ற நிலையில் இங்கிலாந்து, பிரான்ஸ், நெதர்லாந்தும் இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றன.



# மாத்தளை சாஹிரா வெற்றி

மாத்தளை வலயமவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்ட மாணவர்கள் பங்குபற்றிய உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின், இறுதிப் போட்டி மாத்தளை இந்துக் கல்லூரி பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில், அஜ்மீர் தேசிய பாடசாலை அணியுடன் மாத்தளை சாஹிரா தேசிய பாடசாலை அணி விளையாடி மாத்தளை சாஹிரா தேசிய பாடசாலை 1-0 கோல் இட்டு வெற்றிபெற்று மாத்தளை மாவட்ட சம்பியனானதுடன், மாகாணப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 26 ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.